சேதமடைந்த பல ஏரிகளையும், குளங்களையும், நீர்ப் பாசனங்களையும் சீர்படுத்துவதற்கான பணிகளுக்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்து, சீர்படுத்தும் பணிகளை விரைவாக மேற் கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இணைப்பு II

[138-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 404—க்கான விடையைக் காண்க.]

விவர அறிக்கை.

25—9—1977 அன்று திருச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு அறநிலையக் கட்டிட வாடகைதாரர் சங்க மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்களும் அவற்றின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்.

தீர்மானங்கள் (1) :

இது சங்க அமைப்பைப் பற்றியது. அரசு மட்டத்தில், இதன் மேல் நடவடிக்கை தேவையில்லை.

(2) சமீப காலத்தில் இந்து அறநிலையத் துறையினரால் நியாய வாடகை என்ற பெயரால் ஒருதலைப்பட்சமாகவும் அநியாயமாகவும் செலுத்தமுடியாத அளவு உள்ளதாகவும் உயர்த்தப்பட்ட வீடு, கடை வாடகைகள் சம்பந்தமாக பாதிக்கப் பட்ட சங்க உறுப்பினர்கள் கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பரிந்து ஆவன செய்யும்படி இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(3) நடைமுறையில் உள்ள வாடகை நிவாரணச் சட்டத்தை அறநிலையக் கட்டிடங்களுக்கு ரத்து செய்ததை மாற்றி மறு படியும் அனைத்து வாடகைதாரர்கள் போல் எங்களையும் கருதும் வண்ணம் சட்ட மன்ற உறுப்பினர்களையும், சகல அமைச்சர் களையும் இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(4) இந்து அறநிலைய ஆட்சித்துறையினர் கூட்டப்பட்டுள்ள அதிக வாடகையை, இந்த கோரிக்கைகள் சட்ட சபையில் பரிசீலனை செய்து முடிவு செய்யும் வரை ஆணையர் அவர்கள் சகல நிர்வாக அதிகாரிகளுக்கும், பழைய வாடகையையே வாங்கும்படி உத்திரவு பிறப்பிக்கும்படி இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

1979 மார்ச் 15]

(5) பாதிக்கப்பட்ட வாடகைதாரர்கள் இந்து மதத்தினர் அல்லாத கிருஸ்தவ, முகமதிய டிரஸ்ட் போர்டுகளுக்கு இந்த தீர்மான காப்பியை அனுப்பி, அவர்களையும் மாநில அரசு முடிவு எடுக்கும் வரை பழைய வாடகையையே வாங்கவேண்டும் என்றும் ஏற்கனவே நீதி மன்றங்களில் வழக்கு கொடுத்து இருந்தால் அவைகளையும் வாபஸ் பெறவேண்டும் என்றும் இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(6) சில நிர்வாக அதிகாரிகள் வாடகைதாரர்கள் பெயரில் வழக்குகள் தொடர்ந்திருப்பதால் அவைகளை உடனடியாக வாபஸ் பெறும்படி எல்லா நிர்வாக அதிகாரிகளுக்கும், ஆணையர் அவர்கள் உத்திரவு பிறப்பிக்க இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

இத்தீர்மானங்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தீர்மானங்கள் (2) முதல் (6) வரை:—

வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து அரசாணை எண் 1998, உள்துறை, நாள் : 12. 8. 74 ல் அறநிலையங்களின் கட்டிடங்களுக்கு விதி விலக்கு அளித்த பின் அநேக ஆலயங்களின் நிர்வாகிகள் அவரவர்களின் விருப்பம்போல் வாடகை உயர்வு செய்து வந்ததாகப் புகார்கள் வந்ததின் பேரில் தமிழ்நாடு முழுவதும் சீரான முறையில் நியாயமான வாடகை நிர்ணயிப்பதற்காக அந்தந்த வட்டாரங்களிலுள்ள துணை ஆணையாளரைத் தலைவராகவும், இந்து சமய அறநிலைய, துறையின் செயற் பொறியாளரைத் தொழில் நுட்ப அங்கத்தினராகவும், அந்தந்த ஆலயச் செயல் அலுவலர்களைச் செயலாளர்களாகவும்கொண்ட நியாயவாடகை நிர்ணயக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இக்குழுக்கள் ஒவ்வொரு கட்டிடத்தையும் மனையையும் பார்வையிட்டு, அளவெடுத்து, பொதுப்பணித்துறையினர் பின்பற்றும் விதிமுறைகளின்படி வாடகை நிர்ணயம் செய்து வருகின்றன: பொதுப்பணித் துறையினர் கடைபிடிக்கும் முறைப்படி வாடகை நிர்ணயம் செய்யப்படுவதால் விதிவிலக்கு கொடுத்ததை ரத்து செய்யவேண்டிய அவசியம் இல்லை. ஒரு தலைப்பட்சமாக வாடகை நிர்ணயம் செய்யப்படுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது உண்மைக்குப் புறம்பானது. தற்போது நிர்ணயிக்கப்பட்டு வரும் புதிய வாடகையை அமுல்படுத்த உத்திரவிட்டுள்ளபடியால் பழைய வாடகையை வாங்கும் பிரச்சினை எழவில்லை.

வாடகை பாக்கிக்காக பல ஆண்டுகளாக நிலுவையில் நின்ற சில இனங்களில் மட்டும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்குகளை வாபஸ் வாங்கும் பிரச்சினையும் எழவில்லை.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
4-DEC1979
MADRAS